Majlis Ugama Islam Singapura
(Islamic Religious Council of Singapore)

National Environment Agency
Safeguard · Nurture · Cherish

சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் புளோக் 23, 24, 25, 26, N-429, N-1-1, N-1-2 கல்லறைகள் தோண்டியெடுப்பு (புசாரா அபாடி) [கட்டம் 10]

எதிர்காலச் சவ அடக்கங்களுக்குப் போதுமான நிலம் இருப்பதை உறுதிப்படுத்த, தேசிய சுற்றுப்புற அமைப்பு (NEA) சுவா சூ காங் இடுகாட்டில் கல்லறைகளைத் தோண்டியெடுக்கும் திட்டப்பணியை வழக்கமான முறையில் மேற்கொள்கிறது.

புளோக்குகள் 23, 24, 25, 26, N-429, N-1-1, N-1-2 ஆகியவற்றிலுள்ள முஸ்லிம் கல்லறைகள், பதிவு முடிவடையும் தேதிக்குப் பிறகு தோண்டியெடுக்கப்படும் (தயவுசெய்து வரைபடத்தைப் பார்க்கவும்). தோண்டியெடுக்கப்படும் பிரேதச்சிதைவுகள், சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் மறுஅடக்கம் செய்யப்படும். கட்டம் 10 தோண்டியெடுப்புக்கான பதிவு, சரிபார்ப்பு, தோண்டியெடுப்பு, சவப்போர்வை அணிவிப்பு, மறுஅடக்கச் சேவைகள் ஆகியவற்றை மேற்கொள்ள சிங்கப்பூர் இஸ்லாமியச் சமய மன்றத்தை (MUIS) தேசிய சுற்றுப்புற அமைப்பு நியமித்துள்ளது.

முதன்மை கல்லறைகள்

இடுகாட்டின் இந்த புளோக்குகளில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் தங்கள் உறவினரின் (“**காலமான முதன்மை உறவினர்**”) பிரேதச்சிதைவுகளைக் கோருமாறு குடும்ப உறுப்பினர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். கோரிக்கை காலம் 10 ஜூன் 2025 முதல் 9 ஜூன் 2026 வரை **ஓர் ஆண்டு** நீடிக்கும். தோண்டியெடுத்து மறுஅடக்கம் செய்வதற்காகும் செலவுகள் அனைத்தையும் அரசாங்கம் ஏற்கும். முதன்மை கல்லறைகளுக்கு, குடும்ப உறுப்பினர் யாரேனும் எழுத்துபூர்வ எதிர்ப்பை MUIS மன்றத்திடம் சமர்ப்பித்திருந்து, அதற்குத் தீர்வுகாண இயலாத நிலையில், அந்தக் கோரிக்கை ரத்து செய்யப்பட்டு, இறந்தவரின் கல்லறை கோரப்படாத கல்லறையாகத் தோண்டியெடுக்கப்படும் (அதாவது, குடும்பத்தின் கோரிக்கை இல்லாமல் தோண்டியெடுப்புப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்).

துணைக் கல்லறைகள்

சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டின் புளோக்குகள் 23, 24, 25, 26, N-429, N-1-1, N-1-2 ஆகியவற்றுக்கு வெளியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள முதன்மை உறவினரின் சொந்தக்காரர்களான மற்ற குடும்ப உறுப்பினர்களின் ("**காலமான துணை உறவினர்**") பிரேதச்சிதைவுகளையும் குடும்ப உறுப்பினர்கள் கோரலாம். இதன்வழி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பிரேதச்சிதைவுகள் அதே கல்லறையில் அல்லது பக்கத்து பக்கத்து கல்லறைகளில் மறுஅடக்கம் செய்யப்படலாம். காலமான துணை உறவினர், பதிவு முடிவடையும் தேதிக்கு முன்னர் **குறைந்தது 15 ஆண்டுகாலம் அடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்**.

காலமான துணை உறவினர்கள், காலமான முதன்மை உறவினரின் பின்வரும் உறவினராக இருக்கவேண்டும்:



- துணைக் கல்லறை ஒவ்வொன்றின் பதிவுக்கும், **ஒரு கல்லறைக்கு $80 கட்டணம்** (பொருள், சேவை வரிக்குமுன்) விதிக்கப்படும். இந்தக் கட்டணம் திருப்பித்தரப்படாது.
- துணைக் கல்லறையின் பதிவு அல்லது தோண்டியெடுப்பின் தொடர்பில் குடும்ப உறுப்பினர் எவரேனும் MUIS மன்றத்திடம் எழுத்துபூர்வ எதிர்ப்பைச் சமர்ப்பித்தால், பதிவு ரத்து செய்யப்பட்டு, தோண்டியெடுப்புப் பணி மேற்கொள்ளப்படாது.
- துணைக் கல்லறைகளுக்குப் பதிவு செய்ய, இறப்பு அல்லது சவ அடக்கச் சான்றிதழைக் குடும்ப உறுப்பினர்கள் காட்டவேண்டும். இதற்குப் பதிலாக, NEA அமைப்பின் சுவா சூ காங் இடுகாட்டு அலுவலகத்திலிருந்து $20 கட்டணத்திற்கு (பொருள், சேவை வரிக்குப் பிறகு) **சவ அடக்க விவரக்குறிப்பைப்** பெறலாம்.

சுவா சூ காங் இடுகாட்டின் அமைவிட வரைபடம்

முஸ்லிம் இடுகாடு தோண்டியெடுப்பு அலுவலகம் (MCEO)
7 முஸ்லிம் இடுகாட்டுப் பாதை 3, சிங்கப்பூர் 718773
(புசாரா அமன் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில்)

பேருந்து:
- ஜாலான் பஹார் சாலை நெடுகில் (புசாரா அமன் பள்ளிவாசல்)
  - 172 (பூன் லே பேருந்து நிலையத்திலிருந்து)
  - 405 (வார இறுதி மற்றும் பொது விடுமுறை நாட்களில்)
- பழைய சுவா சூ காங் சாலை நெடுகில்
  - 172 (சுவா சூ காங் பேருந்து நிலையத்திலிருந்து)
  - 975

கார் / மோட்டார்சைக்கிள்:
- ஜாலான் பஹார் சாலை நெடுகில் (புசாரா அமன் பள்ளிவாசல்)
  - பொது வாகன நிறுத்துமிடம் A
- பழைய சுவா சூ காங் சாலை
  - பொது வாகன நிறுத்துமிடம் B1

கட்டம் 10-ன்கீழ் தோண்டி எடுக்கப்படவிருக்கும் கல்லறைகள்

வரைபடம் அளவுவீதப்படி வரையப்படவில்லை



8 ஜூன் 2025யன்று மறுசீரமைக்கப்பட்ட
லிம் சூ காங் சாலை
புதிய லிம் சூ காங் சாலைத் திறப்பு பற்றி நிலப் போக்குவரத்து ஆணையம் www.lta.gov.sg இணையத்தளத்தில் வெளியிட்ட செய்தி அறிக்கையைப் பார்க்கவும், அல்லது அண்மையில் புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டிக்கு www.pusara.sg இணையத்தளத்தை நாடவும்.

கல்லறையைக் கோருவது எப்படி

கல்லறைகளின் பதிவும் சரிபார்ப்பும்

1. கோரிக்கை செய்பவர்கள், **செவ்வாய்க்கிழமை, 10 ஜூன் 2025, காலை 9.00** மணியிலிருந்து, **சிங்பாஸ்** பயன்படுத்தி www.pusara.sg **இணையத்தளத்தில்** பதிவு செய்து தங்களது உறவினரின் பிரேதச்சிதைவுகளைக் கோரலாம். இணையம்வழி பதிவு செய்ய இயலாதவர்கள், முஸ்லிம் இடுகாடு தோண்டியெடுப்பு அலுவலகத்திற்கு (MCEO) நேரில் வருகையளிக்க இணையத்தளம் வாயிலாகத் தேதி குறிக்கலாம்.
2. பதிவு செய்வதற்குத் தேவைப்படும் பத்திரங்கள்: கோரிக்கை செய்பவரின் அடையாள அட்டை, இறப்பு அல்லது சவ அடக்கச் சான்றிதழ், அதோடு பொருந்தத்தக்க சூழ்நிலைகளில், இரத்தப் பந்தமுள்ள குடும்ப உறுப்பினர்களின் எழுத்துபூர்வ அதிகாரமளிப்பு அறிக்கை (முதன்மை கல்லறைகளுக்கு மட்டுமே). தத்துப் பிள்ளைகளுக்கான சட்டபூர்வப் பத்திரங்கள் உள்ளிட்ட துணை ஆதாரப் பத்திரங்கள், பொருந்தத்தக்க சூழ்நிலைகளில் தேவைப்படும்.
3. கோரிக்கை செய்பவர், தனது கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்குமுன் குடும்பத்தினர், உறவினர்கள் அனைவரிடமும் ஒப்புதல் பெறுவதற்குப் பொறுப்பாவார்.
4. கோரிக்கை செய்பவர் இணையம்வழி கோரிக்கையைச் சமர்ப்பிக்கும்போது முதன்மை கல்லறையை இணையம்வழி சரிபார்க்கவேண்டும். தேவைப்பட்டால், நேரில் சென்று கல்லறைகளைச் சரிபார்ப்பதற்குத் தேதி குறிக்கவேண்டும்.
5. முதன்மை கல்லறைக்காக இணையம்வழி கோரிக்கை சமர்ப்பிப்பவர்கள், MCEO அலுவலகத்திற்கு நேரில் சென்று ஆதாரப் பத்திரங்களுடன் படிவத்தைச் சமர்ப்பித்து, கட்டணத்தைச் செலுத்துவதன்வழி துணைக் கல்லறையைக் கோரலாம். இதற்கு இணையம்வழி தேதி குறிக்கலாம்.
6. இணையம்வழி பதிவு செய்தவுடன், அதனை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலும் குறுந்தகவலும் கல்லறையைக் கோருபவருக்கு அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பம் பரிசீலிக்கப்படும். கல்லறை தோண்டியெடுக்கப்படும் தேதி பிற்பாடு தெரிவிக்கப்படும்.
7. கோரிக்கை செய்பவர்கள் தங்களது முகவரி அல்லது தொடர்பு எண் மாறினால் MUIS மன்றத்திடம் எழுத்துபூர்வமாகத் தெரியப்படுத்தவேண்டும்.
8. முன்னரே பதிவு செய்வதால் முன்னரே தோண்டியெடுக்கும் தேதி கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஏனெனில், **நடைமுறைத் தேவைகளின் அடிப்படையில் தோண்டியெடுப்பு காலத்திட்டம் நிர்ணயிக்கப்படுகிறது.**
9. பதிவு செய்யப்படும் கோரிக்கைகள் அனைத்தும், கல்லறை தோண்டியெடுப்புக்கு NEA மற்றும் MUIS வரையறுத்துள்ள **விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும்*** உடன்படவேண்டும். *விதிமுறைகளும் நிபந்தனைகளும் இணையத்தளத்தில் கிடைக்கும்
10. தேதி குறிப்பதன்வழி மட்டுமே MCEO அலுவலகத்திற்கு வருகையளிக்க முடியும். தயவுசெய்து இணையப் பதிவு முறையின் மூலம் பதிவு செய்யுங்கள் அல்லது 6238 4504 என்ற எண்ணை அழையுங்கள். குறிப்பு: தேதி குறிக்காமல் வருவோருக்குப் பதிலாகத் தேதி குறித்து வருவோருக்கே முன்னுரிமை கொடுக்கப்படும்.
11. பதிவு செய்வதற்கான இறுதி நாள் **செவ்வாய்க்கிழமை, 9 ஜூன் 2026.**

முஸ்லிம் இடுகாடு தோண்டியெடுப்பு அலுவலகம் (MCEO)
7 முஸ்லிம் இடுகாட்டுப் பாதை 3 சிங்கப்பூர் 718773
(புசாரா அமன் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில்)

திங்கட்கிழமை வியாழக்கிழமை	8.30am – 12.30pm 1.30pm – 4.30pm
வெள்ளிக்கிழமை	8.30am – 12.30pm 2.30pm – 4.30pm
சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, பொது விடுமுறை நாட்கள்	மூடப்பட்டிருக்கும்

Email: info@pusara.sg
Tel: 6238 4504
Website: www.pusara.sg

எங்கள் இணையத்தளத்திற்குச் செல்ல QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

- **இணையம்வழி பதிவு செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது**
- **இணையத்தளத்தில் கூடுதல் விவரங்கள் கிடைக்கும்**

தோண்டியெடுப்பும் மறுஅடக்கமும்

1. ஒவ்வொரு கல்லறையும் MUIS மன்றத்தின் மேற்பார்வையின்கீழ் குத்தகையாளரால் தனித்தனியாகத் தோண்டியெடுக்கப்படும். கல்லறைகளைத் தோண்டியெடுக்கும் பணி 2026 ஜூன் மாதம் தொடங்கும்.
2. கோரிக்கை செய்பவருக்கு மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் வாயிலாகத் தோண்டியெடுக்கும் தேதி பிற்பாடு தெரியப்படுத்தப்படும்.
3. கோரிக்கை செய்பவரும் உறவினர்களும் கல்லறை தோண்டப்படுவதை நேரில் பார்க்க விருப்பப்பட்டால் MUIS மன்றத்திடம் தெரியப்படுத்தவேண்டும். அவர்களால் வர இயலாவிட்டால், மற்ற குடும்ப உறுப்பினர்கள் அல்லது MUIS தங்கள் சார்பில் பார்வையிட எழுத்துபூர்வ அதிகாரமளிப்பு அறிக்கை மூலம் கோரிக்கை செய்பவர் அனுமதி அளிக்கலாம். ஏதாவது மாற்றங்கள் இருந்தால், தோண்டுயெடுப்பு தேதிக்குக் குறைந்தது **இரண்டு வாரங்களுக்கு** முன்னதாக 6238 4504 என்ற எண்ணில் MUIS மன்றத்தை அழைத்து அல்லது info@pusara.org முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி தெரியப்படுத்துங்கள்.
4. தோண்டும்போது, பிரேதச்சிதைவுகளை மீட்க ஆரம்பநிலை மண்ணின் ஆழத்திற்கு (லியாங் லஹாட்) கல்லறை தோண்டப்படும். கிடைக்கும் பிரேதச்சிதைவுகள் வெள்ளைத் துணியில் போர்த்தப்பட்டு மறுஅடக்கம் செய்யப்படும். பிரேதச்சிதைவுகள் எதுவும் கிடைக்காவிட்டால், மறுஅடக்கம் செய்வதற்குக் கல்லறையிலிருந்து சிறிதளவு மண் எடுக்கப்படும்.
5. தோண்டியெடுக்கப்படும் பிரேதச்சிதைவுகளுக்குச் சிறப்புத் தொழுகை செய்யப்படவேண்டுமென சமய நிர்ப்பந்தங்கள் எதுவும் இல்லை என்பதால், **தல்கின்** (சுருக்கமான நினைவூட்டல்) போன்ற சிறப்புத் தொழுகைகள் எதுவும் நடத்தப்படாது.
6. தோண்டியெடுக்கப்படும் பிரேதச்சிதைவுகள் அதே நாளில் சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் மறுஅடக்கம் செய்யப்படும்.
7. கோரிக்கை செய்பவர், புதிய கல்லறையின் புளோக் மற்றும் நிலப்பகுதி எண்களை விவரிக்கும் மறுஅடக்கப் பத்திரத்தை MUIS மன்றத்திடமிருந்து பெறுவார்.
8. பிரேதச்சிதைவுகள் NEA **வழிகாட்டிகளின்படி*** மறுஅடக்கம் செய்யப்படும்:
   - **கோரப்படும் கல்லறைகளுக்கு ஒவ்வொரு நிலப்பகுதியிலும் 8 பிரேதச்சிதைவுகள் மறுஅடக்கம் செய்யப்படும்**
   - **கோரப்படாத கல்லறைகளுக்கு ஒவ்வொரு நிலப்பகுதியிலும் 16 பிரேதச்சிதைவுகள் மறுஅடக்கம் செய்யப்படும்**

   (*) பிரேதச்சிதைவுகளின் அளவுகளைப் பொறுத்து.

சிங்கப்பூருக்கு வெளியில் மறுஅடக்கம்

பிரேதச்சிதைவுகளை சிங்கப்பூருக்கு வெளியில் மறுஅடக்கம் செய்ய, தயவுசெய்து MUIS மன்றத்திடம் தெரியப்படுத்துங்கள். நீங்கள் NEA அமைப்பிடமிருந்து **சவப்பெட்டி ஏற்றுமதி அனுமதி** பெறவேண்டும். இந்த அனுமதிக்கான கட்டணம் $17.50 (பொருள், சேவை வரி உள்ளடங்கும்). சவப்பெட்டி காற்றுப்புகாதவாறு அடைக்கப்பட்டிருக்கவேண்டும். உங்கள் விண்ணப்பத்தை பின்வரும் முகவரியில் NEA அமைப்பிடம் சமர்ப்பிக்கலாம்:

Port Health Office
4545 Jalan Bukit Merah Singapore 159466

விவரங்கள் கேட்டறிய, **6222 2585** என்ற எண்ணை அழையுங்கள்.
ஏற்றுமதிக்கான செலவுகள் அனைத்தையும் கோரிக்கை செய்பவர் ஏற்கவேண்டும்.

கோரப்படாத கல்லறைகள்

கல்லறைகள் அனைத்தும் தோண்டியெடுக்கப்பட்டு, சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் மறுஅடக்கம் செய்யப்படும். மறுஅடக்கத்தை MUIS மேற்பார்வையிடும். மறுஅடக்க விவரப்பதிவுகள் அனைத்தையும் NEA தமது தரவுத்தளத்தில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும்.

முந்திய தோண்டியெடுப்பு நடவடிக்கைகளின் மறுஅடக்க விவரப்பதிவுகள் பற்றி கேட்டறிய விரும்புவோர், தயவுசெய்து உங்கள் கேள்விகளை info@muis.gov.sg இணையவழி கேட்கலாம்.

மேற்காண்பவற்றில் மாற்றங்கள் செய்யப்படலாம். அண்மைத் தகவலுக்கு www.pusara.sg இணையத்தளத்தை நாடுங்கள்.